# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 71/நகராட்சி/2019**

**நாள் : 26/07/2019**

**திரு V. இராம்குமார்,**
**குரோம்பேட்டை,**
**சென்னை – 44** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆவடி நகராட்சி,**
**ஆவடி.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, குரோம்பேட்டை, பழைய அஸ்தினாபுரம் பிரதான சாலை, G1- ஹரிஹர அடுக்கக மனை என்ற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் ஆல்பா தெர்மோ சிஸ்ட நிறுவனத்தின் உரிமையாளர் திரு V. இராம்குமார் அவர்களின் 15.04.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 71/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் ஆவடி நகராட்சி பொறியாளர் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, குரோம்பேட்டை, பழைய அஸ்தினாபுரம் பிரதான சாலை, G1- ஹரிஹர அடுக்கக மனை முகவரியில் வசிக்கும் திரு V. இராம்குமார் என்பவர் தனது ஆல்பா– தெர்மோ சிஸ்டம் நிறுவனத்தால் ஆவடி நகராட்சிக்கு 17 எண்ணிக்கையிலான சுகாதார துடைப்புக் குட்டை (Napkin) எரிதொட்டிகள் (incinerator) வழங்கப்பட்டு, அந்நகராட்சி அமைக்கக் கோரிய இடங்களில் நல்ல முறையில் நிறுவப்பட்டன என்றும் ஆனால் ஓராண்டுக்கு மேலாகியும் மேற்குறிப்பிட்ட சுகாதார சாதனங்களுக்கான பட்டியல் தொகை வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரிடம் 22.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட சுகாதார சாதனங்கள் அமைப்பதற்கான பணி நிறைவு பெற்று ஓராண்டுக்கு மேலாகியும் பட்டியல் தொகை வழங்கப்படவில்லை என்று விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். தொடர்ந்து நான்கு மாதங்களாக நகராட்சியிடம் முறையிட்டும் பட்டியல் தொகை வழங்கப்படாத நிலையிலேயே இம்முறைமன்ற நடுவத்திற்கு மனுச் செய்ததாகவும் தெரிவித்தார்.

3. ஆவடி நகராட்சியில் அடுத்தடுத்து இரண்டு ஆணையாளர்கள் மாறுதலில் சென்று தற்பொழுது ஆணையாளர் பொறுப்பேற்றுள்ள நிலையில் மேற்படி 17 புகை உரக்குடிக் இன்சினிரேட்டர்கள் பொருத்தப்பட்ட பணிக்கான பட்டியல் தொகைக்கான பொருள் தற்பொழுது மன்றத்தில் வைக்கப்பட்டு, 26.07.2019 நாளுக்குள் பட்டியல் தொகை ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துள்ள நகராட்சி ஆணையரின் 17.07.2019 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.8606/18/இ1–ஐ விசாரணையின் போது சமர்ப்பித்தார்.

4. இந்நேர்வில், சுகாதார சாதனங்கள் ஆவடி நகராட்சிக்கு வழங்கியதற்கான பட்டியல் தொகையை மன்ற ஒப்புதல் பெற்று வழங்குவதற்கான நடவடிக்கையை ஆவடி நகராட்சி மேற்கொண்டுள்ளது. இந்நிலையில் முறையீட்டு மனுதாருடைய நிறுவனத்திற்கான பட்டியல் தொகை விரைவில் வழங்கப்பட்டு விடும் என்ற ஆவடி நகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு V. இராம்குமார்,
உரிமையாளர் ஆல்பா தெர்மோ சிஸ்டம்,
G–1, ஹரி ஹர அடுக்ககம்,
பழைய அஸ்தினாபுரம் பிரதான சாலை,
நேரு நகர், குரோம்பேட்டை,
சென்னை – 44

2. மாநகராட்சி ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை – 600 054.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி